பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
30-1-1995

# ★ பொலிஸ் முப்படைகளில் பெரும் மாற்றம்?

(கொழும்பு)

முப்படைகளிலும், பொலிஸ் திணைக்களத்திலும் பெரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட இருப்பதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அலரி மாளிகையில் அண்மையில் வெடி மருந்துகள் மீட்கப்பட்டதை அடுத்து படைத் தளபதிகளைப் பதவி நீக்குமாறு, பொதுசன ஐக்கிய முன்னணி எம். பி.கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் நியமனம்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 36 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 16 இதழ் 360
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 30-1-1995

# இராணுவ தரப்பிடம் புலிகள் முறைப்பாடு

(மட்டக்களப்பு)

கிழக்கில் கடந்த சில தினங்களாகப் படையினர் தமது சோதனை நடவடிக்கையை மிகவும் தீவிரப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் சில விரும்பத்தகாத சம்பவங்கள் ஏற்படும் நிலை உருவாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இத்தவேளை கிழக்கில் படையினரின் அதிகரித்து வரும் கெடுபிடிகள் குறித்து, புலிகளின் உள்ளூர்த் தளபதிகள் இராணுவப் பொறுப்பாளர்களுக்குத் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

அம்பாறைப் பகுதியில் படையினரும் சில விடயங்கள் குறித்து, புலிகளின் உள்ளூர்த் தளபதிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளனராம். -சி

## பேச்சுக்களில் தடங்கல்

# மீண்டும் ஒரு போருக்காக இராணுவம் தயாராகி வருகிறது!

## ஏ.எவ்.பி. செய்தி கூறுகிறது

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகளுடன் மீண்டும் ஒரு போருக்காக இராணுவம் தன்னை தயார்செய்து வருவதாக 'ஏ. எவ். பி.' செய்தி கூறுவதாக 'வெரித்தாஸ்', வனொலி தெரிவித்தது.

இது பற்றி ஏ.எவ்.பி செய்தி கள் தடைப்பட்டிருப்பதால் அமைதியை விரும்புகிறுர்களா
மேலும் தெரிவிக்கையில்; விடு போர் நிறுத்தம் முறிவடை என தனக்கு சந்தேகம் எழுந்
தலைப்புலிகளுக்கும் அரசுக்கு ந்து மீண்டும் யுத்தம் தொடங் திருப்பதாக ஜனாதிபதி சந்தி
மிடையில் நடைபெற வேண் கும் அபாயம் எழுந்துள்ளது. ரிகா கருத்து வெளியிட்டிருப்
டிய சமாதானப் பேச்சுக் விடுதலைப் புலிகள்

(4ம் பக்கம் பார்க்க)

# செஞ்சிலுவைச்சங்கம் ஊடாக பேச்சுக்களை ஆரம்பிக்கமுயற்சி

## அரசு நடவடிக்கை

[கொழும்பு]

விடுதலைப் புலிகளுடன் மீண்டும் சமாதானப் பேச்சுக்களை தொடங்குவதற்காக அரசுசர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியை நாடியிருப்பதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் விதத்தில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் புலிகளுடன் தொடர்பு

(4ம் பக்கம் பார்க்க)

# புலிகள் குறித்து ராணுவம் சந்தேகம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீது இராணுவத்தினர் சந்தேகம் கொண்டிருப்பதாக ஏ.எவ்.பி. செய்தி தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி கூறியது.

(4ம் பக்கம் பார்க்க

# அரசுக்கு எதிராக ஐ.தே.க. விமர்சனம்

[கொழும்பு]

பொ. ச. மு அரசின் போக்கு குறித்து ஐ. தே. க. கடும் விமர்சனங்களை வெளியிடத் தொடங்கியுள்ளது.

அரசின் போக்குக்கு எதிராகவும் மக்களின் நிலைப்பாடு

(4-ம் பக்கம் பார்க்க)

# அரசியல் நிலை பற்றி ஐ.தே.க. ஆராயும்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய நிலை குறித்து ஆராய்வதற்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு அடுத்த சில தினங்களில் கூடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(4ம் பக்கம் பார்க்க]

# புலிகளின் கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ளாதாம்

(கொழும்பு)

மூன்றும் கட்டப் பேச்சில் விடுதலைப் புலிகள் வலியுறுத்திய விடயங்களுக்கு அரசு இணங்கவேமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

போக்கு வரத்து பாதை திறப்பிற்காக பூநகரி முகாம் அகற்றப்படவேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி சந்திரிகாவும் இராணுவ தலைமைப்பீடமும் முற்றாக நிராகரித்துவிட்டனவாம்.

இதேநேரம் கடல்வலய தடை சட்டத்தை மோதல் தவிர்ப்பு உடன்பாட்டின்படி நீக்கவேண்டும் என்ற புலி

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்க் கட்சிகள் கொழும்பில் மாநாடு

(கொழும்பு)

தமிழர் பிரச்னையில் பொதுக் கொள்கை ஒன்றை வகுக்கும் நோக்குடன், கொழும்பில் தமிழ்க் கட்சிகளை உள்ளடக்கும் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டிற்கான ஏற்பாடுகள் தற்போது நடை

4-ம் பக்கம் பார்க்க

# பெருமளவு புலிகள் கிழக்கே ஊடுருவலாம்

(கொழும்பு)

கிழக்கில் புலிகளின் நடமாட்டம் அதிகரித்து வருவதாக கொழும்பு பத்திரிகையொன்று தெரிவித்துள்ளது.

கடந்த இருவாரத்தில் கிழக்கு நோக்கி ஆயிரத்திற்கும் மேற்பட்ட புலிகள் செல்லத் தொடங்கியிருப்பதாகவும் அப்பத்திரிகை ராணுவ வட்டாரங்களை ஆதாரம் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை கிழக்கில் படையினர் தமது முகாம்களின் காவலரண்களை பலப்படுத்தி வருவதுடன் சோதனை நடவடிக்கைகளை தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

# மட்டுநகரில் 350 வீடுகளில் படையினர் முகாமிட்டுள்ளனர்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் பொது மக்களின் 350 வீடுகளில் இராணுவம், பொலிசார் முகாமிட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

வாழைச்சேனையில் 129 வீடுகளிலும், களுவாஞ்சிக்குடியில் 88 வீடுகளிலும், மண்முனையில் 58 வீடுகளிலும், மட்டக்களப்பு நகரத்தில் 44 வீடுகளிலும், போரதீவில் 26 வீடுகளிலும் ஏறுவூரில் 5 வீடுகளிலும் பொலிசாரும் இராணுவத்தினரும் தங்கியுள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

# மாணவரின் கணிதபாட அறிவு குறித்து ஆய்வு நடத்தப்படும்

(கொழும்பு)

க. பொ. த. (சாதாரண) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் கணித பாட அறிவுத்தரம் குறைவாக இருப்பதற்கான காரணங்கள் பற்றி ஆய்வு நடத்தப்படவுள்ளது.

தேசிய கல்வி நிறுவனம் இந்த ஆய்வை மேற்கொள்ளும். 1981ம் ஆண்டு முதல் 1992ம் ஆண்டு வரையில் இந்தப் பரீட்சைக்குத் தோற்றிய சுமார் முப்பதாயிரம் மாணவர்களின் கணித பாட பெறுபேறுகள் பற்றிய மதிப்பீடு ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அனுராதபுரம், கொழும்பு. காலி, கண்டி, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் இந்த ஆய்வு நடத்தப்படும்.

கணித பாடத்தில் மாணவர்கள் காட்டிவரும் ஆர்வத்தை மதிப்பீடு செய்வதற்காக எழுத்துப் பரீட்சை நடாத்தத் தேவையான தகவல்களைப் பெறுவதற்கு தேசிய கல்வி நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. -ரி

## வரி விளம்பரம்

### வைத்தியம்

செங்கண்மாரி (Hepatit s) இரப்பை அல்சர், ஆஸ்மா மூட்டுவாதரோகங்கள் வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சருமநோய்கள், மாதவிடாய்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக் கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்திய கலாநிதி சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்கு வீதி, பறங்கித்தெரு, யாழ்ப்பாணம். (சி-1373)

## அபிராமிபட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் இன்று 30ம் திகதி மாலை 3-00 மணிச்கு அபிராமி பட்டர் விழா நடைபெறவுள்ளது. மாலை 4-30 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று அம்பாள் உள்வீதி, வெளிவீதி வலம் வருதலும் நடைபெறும்.

## நிவாரணம்

(அரியாலை)

ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளில் இடம் பெயர்ந்தோருக்கான அக்டோபர் மாத கடைசி இரண்டு வாரத்துக்குரிய இலவச நிவாரணப் பொருட்கள் அரிசி' சீனி, மா, பருப்பு லக்ஸ்பிறே பால்மா ஆகியன தற்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன. 59

## மாதாந்த ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கோட்ட சி. உ. குழுக்களின் மாதாந்த ஒன்று கூடல் நாளை 31ம்தேதி பி ப. 3-00 மணிக்கு மாலிசந்தி சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## மாதாந்த உதவிப்பணம்

(கொழும்புத்துறை)

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான ஜனவரி மாதத்திற்குரிய கொடுப்பனவு தற்போது அந்தந்தப் பகுதித் தபால் அலுவலகங்களில் வைத்து வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

## முட்டை விலை வீழ்ச்சி

(மானிப்பாய்)

யாழ். குடாட்டில் முட்டையின் விலை திடீரென வீழ்ச்சியடைந்துள்ளன.

சில தினங்களாக 5 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட முட்டைகள் தற்போது 4ரூபா 50 சதமாக குறைந்துள்ளன. -71

## காயம்

(அரியாலை)

உழவுயந்திர சில்லில் கால் சிக்கி புதுக்குடியிப்பு வாசி ஒருவர் காயமடைந்தார்.

ஒளாலி ஊடாக உழவுயந்திரத்தில் பயணம் செய்த வேளை தவறுதலாக கீழே விழுந்த போது கந்தையா தவராசா (வயது 33) என்பவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 59·ரி

# "மக்களை தேடிச்சென்று சேவை செய்யவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

சேவை எனப்படுவது திறந்த மனத்துடன் உள்ளாந்திரமாக ஒருவருக்கு நாம் செய்யும் தொண்டாகும். சேவை செய்யும் ஒவ்வொருவரும் யாருக்கு, எப்பொழுது, எங்கே சேவைசெய்ய வேண்டும் என்பதை நன்கு உணர்ந்து சேவைசெய்யவேண்டும் என்பதை நன்கு உணர்ந்து சேவை செய்யவேண்டும்.

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற யாழ். மாவட்ட லயன்ஸ் சழக வருடாந்த ஒன்று கூடல் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) சிறப்புரை வழங்குகையில் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பிரதேச லயன்ஸ் கழகத் தலைவர் லயன் எஸ். இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பேராசிரியர் சிவஞானசுந்தரம் தொடர்ந்து உரையாற்றுகையில்; லயன்ஸ் கழகம் உலகளாவிய ரீதியில் இயங்கி வருகிறது. இந்தக் கழகம் ஒரு குடும்பம் போன்று சகல அங்கத்தவர்களும் செயல்பட்டு வருகிறார்கள். எமது நாடு, எமது மாவட்டம், எமது பிரதேசம் என்கின்ற நல்ல நோக்கோடு பரந்த அடிப்படையில் செயல்பட்டுவருவது லயன்ஸ் கழகம், நாம் எமது மக்களைத் தேடிச் சென்று அவர்களுக்கு எம்மால் என்னசேவைசெய்ய முடியும் என்பதை இனம் கண்டு இதயசுத்தியுடன் எமது பணியைச் செய்யவேண்டும். இதுவே தன்னலமற்ற உண்மையான தொண்டாகும்.

சேவை செய்பவர்கள் மக்களை நேசிப்பவர்களாக இருக்க வேண்டும். மக்களுடன் மக்களாகப் பழகக்கூடியவர்களா இருக்கவேண்டும் என்றார்.

யாழ். மாவட்ட லயன்ஸ் கழக ஆளுநர் லயன் சிவபாதசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இந்நிகழ்வில் லயன்ஸ் கழக பிரதேச செயலக உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினார்கள். 162

## திருட்டு

(அரியாலை)

யாழ். இராசாவின் தோட்டம் அருள்மாதா ஆலய வழி நாட்டுக்கு சென்றவரின் பூட்டியிருந்த சைக்கிள் மாலை நேரத்தில் திருட்டுப் போயுள்ளது. 59

# நுளம்பை கட்டுப்படுத்த வெளிநாட்டு உதவி

(கொழும்பு)

கொழும்பில் பெருகிவரும் நுளம்பை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அமைச்சு வெளிநாடுகளின் ஆலோசனைகளை நாடியுள்ளது.

கொழும்பு நகரில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நுளம்புகளை கட்டுப்படுத்த முடியாது கொழும்பு மாநகரசபை சுகாதாரப்பிரிவு திண்டாடிவருகின்றது.

கொழும்பு நகரில் வீதிகளில் வீசப்படும் கழிவுப் பொருட்களை கொழும்பு மாநகரசபை பகல் இரவாக அகற்றி வருவதுடன் நுளம்பின் தொல்லையைக் கட்டுப்படுத்துவதற்காக நுளம்பு மருந்துகளை அவ்வப்போது தெளித்து வந்தாலும் நுளம்பின் பெருக்கத்தை கட்டுப்படுத்த முடியாதுள்ளது

கொழும்பு நகரில் வசிக்கும் மக்கள் இரவு நேரத்தில் நுளம்புத் தொல்லைகளினால் நிம்மதியாக படுத்து உறங்க முடியாதுள்ளனர். வி-ரி

## கரும்பலகைகள்

(வட்டுக்கோட்டை)

சங்கானைக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு கரும்பலகைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. விக்கினேஸ்வரன் சிபார்சு செய்த பாடசாலைகளுக்கே கரும்பலகைகள் வழங்கப்படுகின்றன. -120

# ராஜீவ் ஆட்சியை கவிழ்க்க திட்டமிட்டவர் அர்ஜுன்சிங்

(புதுடில்லி)

ராஜீவ் பிரதமராக இருந்த போது அவரது ஆட்சியைக் கவிழ்க்க திட்டமிட்டவர் அர்ஜுன்சிங் என்று மத்திய மந்திரி குலாம்நபி அசாத் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ராஜீவ்காந்தி பிரதமராக இருந்தபோது மத்திய மந்திரியாக இருந்த அர்ஜுன் சிங்கும் மற்றும் வேறு காங்கிரஸ் தலைவர்களும் மறைமுகமாக அவரைக்கவிழ்க்கச் சதிசெய்தனர்,

குறிப்பாக போபஸ் பீரங்கி பேர ஊழல் புகாரில் ராஜீவ் காந்தியின் பெயரையும் சேர்த்து பொய்பிரசாரம் செய்தவர் அர்ஜுன் சிங்தான். இன்று அரசியலில் ஆதாயம் தேடுவதற்காக ராஜீவின் பெயரை பயன்படுத்துகிறார் என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

# வீட்டினுள் நுழைந்து பசுமாடு திருட்டு

(நெல்லியடி)

இரவுவேளை வீட்டில் உட்புகுந்த இனந்தெரியா திருடர் கோஷ்டி கன்றுடன் சேர்ந்து நின்ற மூவாயிரம் ரூபா பெறுமதிமிக்க பசுமாட்டை மட்டும் அவிழ்த்துக்கொண்டு சென்றுள்ளார்கள்.

இச்சம்பவம் புலோலி-தெற்கு உபயகதிர்காமம் என்னுமிடத்தில் விக்கினேஸ்வரமூர்த்தி என்பவர் வீட்டில் இடம்பெற்றுள்ளது

இதேவேளை நள்ளிரவு வேளை பூட்டப்பட்டிருந்த வீட்டின் படலையை திறந்து உட்புகுந்த திருடர்கள் முற்றத்தில் கட்டப்பட்டிருந்த ஆறுயிரம் ரூபா பெறுமதியான பசுமாட்டைத் திருடிக் கொண்டு சென்றார்கள்.

இச்சம்பவம் புலோலி புற்றளை ஆலய வீதியில் மார்க்கண்டு என்பவரின் வீட்டில் நிகழ்ந்துள்ளது. -160

# வலிமேற்கில் செயலக நடமாடும் சேவைத் திட்டம்

(வட்டுக்கோட்டை)

வலிகாமம் - மேற்கு சங்கானைப் பிரதேச செயலக நடமாடும் சேவை நிகழ்வு ஒன்று அண்மையில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்றது.

வலி-மேற்கு சங்கானைப் பிரதேச செயலாளர் திரு. கா. சந்திரராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. ச. பரமேஸ்வரநாதன், நிர்வாக உதவியாளர் திரு. எஸ். புத்திசிகாமணி, சமூகத் தொண்டர் திரு. த. இளையதம்பி, கிராமசேவையாளர் திரு. க. ஸ்ரீகரன் ஆகியோர் கலந்து கொண்டு நடமாடும் சேவைத் திட்டம் பற்றி உரை நிகழ்த்தினர்.

வட்டுக்கிழக்கு கிராமத்தைச் சேர்ந்த பொது ஸ்தாபனங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் பெருந்தொகையானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். -139

# கால்நடைகளுக்கான தடுப்பூசிகள் ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்துடன் இணைந்து கால் நடைகளுக்கான தடுப்பூசிகள் ஏற்றிவருகின்றனர்.

கடந்த வருடத்தில் யாழ். மாவட்டத்தில் மட்டும் 6,75, 534 கோழிகளுக்கு கொள்ளை நோய்த் தடுப்பூசியும் 6825 கோழிகளுக்கு அம்மை நோய் தடுப்பூசியும், 4116 கோழிகளுக்கு தொண்டையடைப்பான் நோய் தடுப்பூசியும் ஏற்றப்பட்டது.

நோய் வந்த பின்னர் சிகிச்சை செய்வதனைவிட நோய் வரமுன் தடுப்பதே உயர் உற்பத்தியை பெற சிறந்த வழியாகும். எனவே சகல கால் நடை வளர்ப்போர்களும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனச் செயலகங்களில் அல்லது கால் நடை உற்பத்தி சுகாதார நிலையங்களில் தொடர்புகொண்டு தடுப்பூசிகளை ஏற்றி கால்நடைகள் கோழிகளை பாதுகாத்துக் கொள்ளுமாறு தமிழீழ பொருணமிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக்கொள்கிறது.

## புனிதலூர்து அன்னை திருவிழா

(அரியாலை)

சாவகச்சேரி மட்டுவில் புனித லூர்து அன்னையின் திருவிழா நாளை 31ந்திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 4ந்திகதி சனிக்கிழமை திருவிழா திருப்பலியுடன் நிறைவுபெறுகின்றது. (59]

## கருத்தரங்கு

(நெல்லியடி)

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவினரால் உணவு போசாக்குத் திட்டக் கருத்தரங்கு அடுத்தமாதம் 9ம் திகதி பி. பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஆரம்ப சுகாகார கணிப்பின் முக்கியத்துவம் தாய் சேய் நலமும் போஷாக்கும் குறைந்த செலவில் நிறைந்த உணவு போன்ற தலைப்பில் கருத்தரங்கு இடம்பெறும்.

## கட்டாசகாலி நாய்கள் பிடிக்கப்பட்டன

(மானிப்பாய்)

ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய் பகுதிகளில் கட்டாக்காலியாக வீதிகளில் திரியும் நாய்கள் மானிப்பாய் பிரதேச சபையினுல் சில தினங்களுக்கு முன்னர் பிடிக்கப்பட்டன. -71

## டீசல் வராததால் ஜெனரேட்டர் இயங்கவில்லை

(நெல்லியடி)

மந்திகை மருத்துவமனையின் பாவனைக்கென கடந்த வருடம் கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட இருஜெனரேட்டர்களும் இயங்குவதற்கு இதுவரை அதற்கான டீசல் வந்து சேரவில்லை. -160

### மணிவாக்கு

அறிவு என்பது ஆற்றைப் போன்றது. அது எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக இருக்கின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு சந்தடியின்றி அமைதியாக இருக்கும்.

— பேக்கன்

# மொழி அறிவை ஒவ்வொரு மாணவரும் தெளிவுற கற்றுக்கொள்ள வேண்டும்"

## இளங்குமரன் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

பழம்பெரும் பெருமைகளைப் பேசித் திருப்திப்பட்டுக்கொண்டிராது எமது வருங்காலச் சந்ததியினரின் கல்வி வளர்ச்சியில் முன்னின்று உழைக்க வேண்டும் என்று தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் தெரிவித்தார்.

யாழ். கனகரத்தினம் ம. ம. வித்தியாலய வர்த்தக மாணவர் மன்றத்தின் வணிக ஜோதி 17 வது மலர் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை வழங்குகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வர்த்தக மாணவர் மன்றத் தலைவர் செல்வன் க. ஜெக்சன்ஜெகன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில திரு. இளங்குமரன் தொடர்ந்து உரையாற்றுகையில்;- மொழி அறிவு எமது மாணவர்களுக்கு மிக முக்கியமான தொன்றாகும். மொழி அறிவை ஒவ்வொரு மாணவர்களும் தெளிவுறக் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லையெனில் எமது மண்ணில் எமது கல்வித்தரம் மிக மோசமான பின்னடைவை ஏற்படுத்தி விடும்.

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் எமது மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தில் பலவகையான தடைகள் இருந்தபோதிலும் அண்மையில வெளியான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளின்படி எமது மாணவர்கள் கல்வியிலுள்ள தமது ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். இந்தப் பெறுபேறுகளின்படி முல்லைத்தீவு மாவட்டம் முதலாமிடத்தையும், யாழ்ப்பாண மாவட்டம் இரண்டாமிடத்தையும், மன்னார் மாவட்டம் ஐந்தாமிடத்தையும் பெற்றிருப்பது எமது மாணவர்கள் கல்வியில் வைத்திருக்கும் ஆர்வத்தை தெளிவுபடுத்துகிறது.

எம்மத்தியில் இன்று மொழி அறிவு அற்ற மாணவர்கள் பலர் காணப்படுகின்றனர், இம்மாணவர்கள் தமது பெயரையே தமது மொழியில் எழுதுவதற்கு தெரியாதுள்ளனர். இந்த நிலை மாறவேண்டும். எமது ஆசிரியப்பெருமக்களை கல்விமான்கள் இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்கு தம்மாலான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

இன்று எமது பிரதேசத்தில் இடம்பெயர்ந்த பாடசாலைகள் எத்தனையோ எவ்வித வசதிகள் வாய்ப்புக்கள் அற்ற நிலையில் தமது கல்வியில் முன்னேற்றம் கண்டுள்ளார்கள். எமது மாணவர்களின் தொடக்கநிலைக் கல்வியில் நல்ல அத்திடாரத்தை இட்டால் தான் எதிர்காலத்தில் எமது கல்வி தாழ்ந்து செல்லாது காப்பாற்றிக்கொள்ள முடியும். எம்மிடம் உள்ள ஒரே ஒரு சொத்தான கல்வியை தாழ்ந்து போகவிடாது பாதுகாத்துக் கொள்வதுடன் எமது விடுதலைப் போராட்டத்துக்கும் இது உதவவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். பல்கலைக் கழக கல்வித் துறை தலைவர் பேராசிரியர் வ. ஆறுமுகம் உரையாற்றுகையில் கல்வி என்பது எமதுவாழ்க்கையில் ஒருநீண்ட பயணமாகிறது. அதாவது கருப்பையிலிருந்து கல்லறை வரை நடைபெறுவது கல்வி என்று தெரிவித்தார்.

வணிகஜோதி 17-வது மலரை இக்கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு மு. இராமலிங்கம் வெளியிட்டு வைக்க இக்கல்லூரி அபிவிருத்தி சங்க செயலாளர் திரு. சி. தனபாலசூரியர் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார்.

யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இ. நந்தகுமாரன், வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. கே. கே. அருள்வேல் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

-162-ரி

## நமது நோக்கு

### பாடத்தெளிவு

க. பொ. த. (சா/த) தமிழீழத் தேர்வின் அடிப்படையில் உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

பெற்றோர் தமது பிள்ளைகளைச் சேர்ப்பதற்குக் காட்டும் ஆர்வத்தில் அரைப்பங்காயினும் பாடத்தெரிவிற் காட்டுவதில்லை எனக் கூறப்படுகின்றது.

ஏனெனில் — உயர் தொழில் ஒன்றைப் பெற வேண்டும் என்ற நோக்கோடு ஏற்கனவே சில குறிக்கோள்களை மனதில் வைத்து செயல்பட்டு வருவதே யதார்த்தநிலை.

மாணவனின் அறிவுக்கூர்மை, தொழிலுக்கான ஆர்வம் மனப்பாங்கு ஆற்றல் ஆகியவற்றைக்கணிப்பிட்டுத் தீர்மானிக்கவேண்டிய சங்கதி பாடத் தெரிவாகும்.

ஆசிரியர் – மாணவர் — பெற்றோர் ஆகியோரின் கூட்டுமுயற்சி மாத்திரமல்லாது, நாட்டு வளம், எதிர்காலத் தொழில் வாய்ப்புகள் ஆகியனவும் பாடத் தெரிவிக்குப் பெரிதும் உதவும்.

சோதிடர் ஆலோசனை கைகொடுத்தாலும், நாட்டின் விசேட சூழ்நிலை காரணமாக, எதிர்பார்ப்புகள் நடைமுறைச் சித்தாந்தத்திற்குப் பொருந்தாமற் போய்விடுவதுண்டு

முன்பு — பொறியியல் துறை பிரபல்யமாக இருந்தது! அரச நிர்வாகத் துறையை நம்பி கலைத் துறையிற் கால் வைத்த காலமும் இருந்தது:

மருத்துவத்துறையை நம்பிப் பயின்று, தரப்படுத்தல் காரணமாகத் தடைகள் வந்தபின், தடம்புரண்டு வர்த்தகத் துறையை நாடியபோது, அதன் வெட்டுப்புள்ளி உயர்ந்து வந்த காரணத்தால், நொந்துபோன பலர் இன்று மீண்டும் கலைத்துறையை நாடும் காட்சியும் தென்படுகிறது

நிர்வாகம், விநியோகம் மாத்திரமல்லாது, உற்பத்தித்துறையைப் பெருக்கி வளர்த்து வேலைவாய்ப்புப் பெறுவதற்கும் பாடத் தெரிவுக்கு வழிகாட்டல் அவசியம்,

தொழில் வழிகாட்டலுக்காகப் பாடநெறி வகுத்து, பயிற்சியளித்து பரீட்சை வைத்துச் சில ஆசிரியர்களுக்குச் சான்றிதழ் வழங்கியதெல்லாம் மறந்துபோன பழைய சங்கதி.

மாணவருக்கு நாட்டு வளம் பற்றியும், தொழில் வாய்ப்புகள் பற்றியும், ஆலோசனைகள், தகவல்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்!

## புலதும் பத்தும்

### இறுதி ஒப்பம்!

30-1-48 ல் மகாத்மா காந்தி இவ்வுலகைவிட்டு நீங்கினாரல்லவா? அவர் இறுதியாக இட்ட ஒப்பம் ஏன், யாருக்கு? இலங்கைச் சிறுமி ஒருவருக்காம்! அன்றைய தினம் அவரைக் காணச் சென்றவர் இலங்கையைச் சேர்ந்த டாக்டர் வி. சில்வா, அவரோடு கூடப் போன மகள், தனது கையொப்பம் சேகரிக்கும் கையேட்டை [Autograph] நீட்ட, மகாத்மா மகிழ்ச்சியோடு ஒப்பம் இட்டாராம்!

30-1-64 ல் வெளிவந்த 'வீரகேசரி'க் கட்டுரையில். தேடி ஆய்ந்த இச்செய்தியையும் சேர்த்து எழுதியவர் யார்?

இன்று யாழ். நகரிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றிற் பணிபுரிந்து வருகிறாராம்!

— மயூரன்

## இராசி பலன்

30–1–1995

திங்கட்கிழமை

(தமிழுக்கு தை 16)

சதுர்த்தி காலை 6-36வரை, உத்தராடம், மரணயோகம், மாலை 5-17 வரை, அமாவாசை விரதம், இராகு காலம் காலை 8-06 முதல் 9-36 வரை, சுபவேளை நண்பகல் 12-36 முதல் 2-06வரை.

மேடம்: தொழில் பாராட்டு சென்ற இடத்தில் சிறப்பு, பணவரவு.

இடபம்: குடும்ப விரோதம், உறவில் விரிசல். அகால உணவு.

மிதுனம்; சுடும் சினம் வாக்குவாதம், வீணபிரயம்.

கடகம்: பெரியோர் ஆசி, தெய்வீகப்பணி, மனநிறைவு.

சிங்கம்: குளம்பித் தெளிதல். கடன் வரவு, இனிய சுற்றுலா.

கன்னி: விரோதித்தல், கடமை தளர்வு, அலைச்சல்.

துலாம்: பதவி மாற்றம், மனப்போராட்டம், உதவிக் குறைவு.

விருச்சிகம்: நினைத்ததைச் சாதித்தல், விருந்துபசாரம். உறவினர் சிறப்பு.

தனுசு: போட்டி நிலை, பழைய பகை. மனவிரக்தி.

மகரம்: மகிழ்ச்சியான சம்பவம், பணப்புளக்கம், சுபச் செய்தி.

கும்பம்: குறுகிய சிந்தனை, மாமியார்துயர், யோசனை.

மீனம்: சுபகாரியம், தந்திர நடவடிக்கை, கருத்து வன்மை

**ஜோஸ்யர்**

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995–01–30

திங்கள் இரவு

08-01 தளிர்கள்-சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08-20 எங்களின் தேசம்
08-30 செய்திகள்
08-40 தர்சனம்- நாதஸ்வர மேதை திரு. கோ. பஞ்சமூர்த்தி அவர்களுடனான செவ்வி
09-00 இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

1995–01–31

செவ்வாய் காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 இன்றைய தாரகை
07-30 செய்திகள்
07.35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள்
08-00 காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995–01–30

திங்கள் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05.10 புதியவை
05-15 ஆழியமுதம்
05-30 மாணவர் பக்கம்
06-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
06-02 நேயர் நெஞ்சம்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

## 33 படகுகளில் சென்ற மீனவரை காணவில்லை

(சென்னை)

தமிழகம் வேதாரணியம் கோடிக்கரையிலிருந்து 33 படகுகளில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் காணமல் போய் விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மீனவர்களின் வரவை எதிர்பார்த்து இவர்களின் குடும்பங்கள் ஆழ்ந்த கவலையுடன் இருக்கிறார்கள்.

இவர்கள் நிலைபற்றி அறிய நடவடிக்கை எடுக்குமாறு ம. தி. மு. தலைவர் திரு. வை. கோபாலசாமி இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

-ரி

## தமிழக முதல்வருக்கு எதிராக வழக்கு தாக்கல்

(சென்னை)

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராக தமிழக ஆளுநர் திரு சென்னரெட்டி வழக்கு தாக்கல் செய்யவுள்ளார்.

இவ்வழக்கு தொடர்பான கோப்புகளை திரு. சென்னரெட்டி ஏற்கனவே நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்,

பாதுகாப்பு வழங்கினால்

## சொந்த இடங்களுக்கு திரும்பத் தயார்

(மட்டுநகர்)

அரசு பாதுகாப்பு அளித்தால் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப தயார் என்று மட்டு.மாவட்ட எல்லைப்புற அகதிகள் தெரிவித்துள்ளனர்.

இம்மாவட்டத்தில் இடம் பெயர்ந்து சொந்த இடங்களில் மீளக்குடியமரச்சென்ற பலர் பாதுகாப்புவசதிகளின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவது குறிப்பிடத்தக்கது.

ரி

யாழ். வைத்தியசாலையில்

## செஞ்சிலுவை தொண்டர் சேவை [illegible]ஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர்கள் சேவை மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இத்தொண்டர்கள் முன்பு காவல் கடமைகளிலும் பாஸ் எழுதுவதிலும் தமது பணிகளை மேற்கொண்டு வந்தார்கள்.

இவர்களின் சேவை விஸ்தரிக்கப்பட்டு இப்பொழுது நோயாளர்களை சத்திரசிகிச்சை நிலையத்திலிருந்தும் மற்றும் வாட்டுக்களில் அனுமதிக்கப்படும் நோயாளர்களையும் வாட்டுக்களுக்கு எடுத்துச் செல்லும் பணிகளும் மேற்கொண்டு வருகின்றனர்.

162-ரி

மட்டு: மன்னம்பிட்டி வீதியில்

## லொறி வழி மறித்து கொள்ளை

(மட்டுநகர்)

மரக்கறி ஏற்றிக் கொண்டு மட்டக்களப்பு சென்ற இரு லொறிகள் மன்னம்பிட்டி வீதியில் வழிமறிக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டன.

இவ்வீதியில் ஏற்கனவே பல தடவைகள் இவ்வாறான கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இவ்வீதியில் வரும் வாகனங்கள் ஆயுதமுனையில் வழிமறிக்கப்பட்டு கொள்ளை நடத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ரி)

# பத்து வருட காலப் போரில் பதினொராயிரம் படையினர்பலி

## 8,000 பேர் அங்கவீனர்களாயினர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இடம் பெற்று வரும் போரில் கடந்த பத்து வருடங்களில் பதினொராயிரத்திற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப போரினால் படுகாயமடைந்த படையினரில் எண்ணாயிரத்திற்கும் மேற்பட்டோர் கை, கால் போன்ற உறுப்புகளை இழந்து அங்கவீனர்களாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது, வடக்கு -கிழக்கு போரில் உயிரிழந்த படையினரை கௌரவிக்கும் நோக்கில் தெற்கில் அவர்களுக்கு சிலைகள், நினைவு தூபிகள் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை வடக்கு கிழக்கு பகுதியில் இந்தியப்படையினர் விடுதலைப்புலிகளுடன் நடாத்திய இரண்டரை வருட காலப் போரில் 2000 ற்கும் மேற்பட்ட இந்தியப்படையினர் உயிரிழந்ததுடன் 3,500 பேர்வரை படுகாயமடைந்ததும் குறிப்பிடத்தக்கது. [சி]

# சகோதரசிறுவர்கள் நீரில் மூழ்கிப் பலி!

[வட்டுக்கோட்டை]

ஐந்தாம் ஆண்டும் 3-ம் ஆண்டும் படிக்கின்ற சகோதரச் சிறுவர்கள் இருவர் தீர்த்தக்கேணி ஒன்றில் விழுந்து நீரில் மூழ்கி பலியானார்கள் எனக் கூறப்படுகிறது.

இப்பரிதாபகரமான சம்பவம் வட்டுக்கோட்டையில் நேற்று நிகழ்ந்துள்ளது, வட்டுக்கோட்டை அடைக்கலம் தோட்டம் கந்தசுவாமியார் கோவில் புனித தீர்த்தக் கேணியில் தவறுதலாக வீழ்ந்து இவர்கள் இருவரும் நீரில் மூழ்கிப் பலியானார்களாம்.

கோவிலுக்கு முன்பகுதியில் உள்ள வீடொன்றில் வசிக்கும் இவர்கள், தமது பெற்றோர் வீட்டுக் கிருத்தியம் ஒன்றிற்குச் சென்றுள்ளதை அடுத்து இருவரும் கேணிக்கு வந்ததாகவும் கேணிப்படிகளில் நின்று விளையாடிய போது தவறி வீழ்ந்து பலியாகியிருக்கலாமெனவும் கூறப்படுகிறது.

இவர்கள் இருவரையும் தேடிய அயலவர்கள் தீர்த்தக் கேணியில் கண்டுபிடித்து இவர்களை நீருக்கு வெளியே தூக்கிப் பார்த்தபோது இருவரும இறந்திருக்கக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [139-சி]

# அமைச்சர்களை சந்திப்பதற்கு

## தவம் கிடக்கும் அரச எம். பி.க்கள்

(கொழும்பு)

அமைச்சர்கள் பலரை தங்களால் சந்திக்கமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக அரசுதரப்பு எம். பி.க்கள் பலர் ஜனாதிபதி சந்திரிகாவிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

பல அமைச்சர்களை வாரத்தில் ஒருமுறைகூட சந்திக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தாங்கள் பல பிரச்னைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் பல எம்- பி க்கள் ஜனாதிபதியிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து நாடாளுமன்றம் கூடும் நாட்களில் காலை 10 மணிமுதல் 12 மணி வரையும் ஏனைய காலத்தில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் அரச எம். பி.க்களை அமைச்சர்கள் சந்திக்கவேண்டும் என்று திருமதி சந்திரிகா கண்டிப்பாக கூறியுள்ளாராம்.

இதையடுத்து அண்மையில் அரச எம். பி.க்களை சந்தித்த கல்வி அமைச்சர் திரு. ரிச்சர்ட் பத்திரான எம். பி.க்களின் பலத்த கண்டனத்திற்கிலக்கானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

### பேச்சுக்களில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பதுடன் சமாதானப் பேச்சுக்கள் தோல்வி கண்டால் இராணுவம். புலிகளை திறம்பட எதிர்கொள்ளும் என எச்சரித்திருப்பதும் குறிப்பிடத்தக்கதொன்று.

இந்நிலையில் விடுதலைப் புலிகளுடன் மற்றொரு போருக்காக இராணுவம் தன்னை தயார்படுத்தி வருவதாகவும் அச்செய்தி தெரிவித்தது. -சி

### நுளம்புத் தொல்லை அதிகரிப்பு

(அரியாலை)

யாழ், குடாநாட்டில் மீண்டும் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளது. வாய்க்கால்கள் துப்பரவு செய்யப்படாமையினால் நுளம்புப் பெருக்கம் அதிகரித்துள்ளது. - 59.

# ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தை திறக்க கோரிக்கை

(கொழும்பு)

ஸ்ரீஜெவர்த்தனபுர பல்கலைக்கழகத்தை மீண்டும் திறக்கும்படி, மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பல்கலைச் கழகத்தில் உள்ள மாணவர்களில் இரு கோஷ்டிகளிடையே ஏற்பட்ட தாக்குதல் நடவடிக்கையினால் இந்தப் பல்கலைக் கழகம் அரசாங்கத்தால் காலவரையின்றி மூடப்பட்டது தெரிந்ததே.

பல்கலைக் கழகத்தை உடன் திறந்து வகுப்புக்களை ஆரமபிக்க வேண்டுமெனவும் மாணவர்கள் கோரியுள்ளனர் (ம-சி)

### பிரபல பாடகர் சி. எஸ். ஜெயராமன் காலமானார்

(சென்னை)

பிரபல திரைப்பட பின்னணிப் பாடகர் திரு சிதம்பரம் ஜெயராமன் (சி. எஸ் ஜெயராமன்) நேற்று முன்தினம் சென்னையில் காலமானார்.

'குற்றம்புரிந்தவன் வாழ்வில் நிம்மதி ஏது', 'விண்ணோடும் முகிலோடும் விளையாடும் வெணணிலாவே', 'கன்னித் தமிழ்' பெண்ணொருத்தி, என்னருகில் வந்தாள், 'காவியமா நெஞ்சில் ஓவியமா' போன்ற பாடல்களை பாடி இசை உலகில் இவர் தனக்கென ஒரு பாணியை ஏற்படுத்தியிருந்தார். இறக்கும்போது இவருக்கு வயது 76 ஆகும். (சி)

### புலிகள் குறித்து

1-ம் பக்கத் தொடர்ச்சி)

அச் செய்தி மேலும் கூறுகையில் மட்டக்களப்பில் புலிகள் பெற்றோல், டீசல் போன்ற பொருட்களை வாங்குகிறார்கள் மேலும் பதுங்கு குழிகளைத் தோண்டும் வேலையில ஈடுபடும் புலிகள், மார்ச் மாதமளவில் மழைக்காலம் முடிவடைந்ததும் மீண்டும்போரை ஆரம்பிக்கக்கூடும் எனவும் இராணுவம் சந்தேகம் கொண்டுள்ளது.

இதைக் கவனத்திற்கொண்டு படையினரும் தம்மைத் தயார்படுத்தி வருகின்றனர் என்றும் 'அது குறிப்பிட்டுள்ளது. -[சி]

### 75 பேர் பயிற்சி

[ஆனைப்பந்தி]

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக தீவகப் பிரிவினரால் அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட நுண்கலை பயிற்சிக் கல்லூரியில் தற்போது சுமார் 75 பேர் வரையில் பயிற்சி பெற்று வருகின்றனர். [101]

### மட்டுநகரில்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் இந்த வீட்டு உரிமையாளர் தங்கள் வீடுகளுக்கு மீளக்குடியமர செல்ல முடியாத நிலையில் அகதி முகாம்களில் தொடர்ந்து இருந்து வருகின்றார்கள் என்று அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. [ம-சி]

# அடுத்த வருடம் முதல் விசேட அடையாள அட்டை

[கொழும்பு)

அடுத்த வருடத்தில் இருந்து விசேட அடையாள அட்டைகள் வழங்குவதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. இவற்றைத் தயாரிப்பதில் கணனி தொழில் நுட்பம் உபயோகிக்கப்படவுள்ளது.

இதன் காரணமாக போலி அடையாள அட்டைகளை தயாரிப்பது தடுக்கப்படுகின்றது. வருடா வருடம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் அடையாள அட்டை பெறுவதற்கு தகுதி உடையவர்ராகின்றார்கள்.

1979 - ம் ஆண்டில் பிறந்த ஒவ்வொரு பிரசையிடமும் தற்சமயம் அடையாளஅட்டை இருக்க வேண்டும் 95 சதவீத மானோருக்கு அதிகமானோர் அடையாள அட்டைகளை பெற்றுள்ளளர் என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். [ம - சி]

### செஞ்சிலுவைச்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள அரசு முனைந்ததாகவும் அச்செய்தி தெரிவித்துள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மத்தியஸ்தம் மூலம் மீண்டும் பேச்சுக்களை நடாத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டுவரும் அதே வேளை புலிகளின் கோரிக்கைகளை விடுத்து அரசியல் தீர்வு தொடர்பாக பேச்சுக்களை பொறுத்தே வடக்கு-கிழக்கு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதா இல்லையா என்பதை முடிவு செய்ய உத்தேசித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. -சி

### அரசியல் நிலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூடும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு தற்போதைய அரசியல் நிலை குறித்தும், சமாதானப் பேச்சுக்களின் முன்னேற்றம் குறித்தும் ஆராயும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் வெளியிட்ட அரசின் கொள்கைத் திட்டங்கள் குறித்தும் ஐக்கிய தேசியக் கட்சி பரிசீலிக்கும் எனவும் செயற்குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார். -சி

### தமிழ்க் கட்சிகள்

(1ம பக்கத் தொடர்ச்சி)

பெற்று வருகின்றன. அமைச்சர் தொண்டமான் தலைமையில் இம்மாநாடு நடத்தப்படவுள்ளது.

அரசியலமைப்பு மாற்றத்தின்போது தமிழ்க் கட்சிகள் எவ்வாறு நடந்துகொள்ள் வேண்டும் என்பது குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. ரி-சி

# காணமல் போனவர்கள் பற்றி விபரங்கள் சமர்ப்பிக்கலாம்

கொழும்பு)

மேற்கு, தெற்கு, சப்பிரகமுவ மாகாணங்களில் காணமற்போனவர்கள், கடத்தப்பட்டவர்கள் பற்றி விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து விபரங்களைக் கோரியுள்ளது.

பொதுமக்கள் அடுத்த மாதம் 14ம் திகதி வரை தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்நலாம் என்று ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஆணைக் குழுவின் தலைவியான மனோகரி முத்தெட்டுகம கருத்துத் தெரிவிக்கையில்: இது பற்றிய விபரங்களை வழங்குவதற்குச் சுலபமான வகையில் வினாக்கொத்து ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், பொதுமக்கள் ஆணைக்குழுச் செயலகத்தில் வினாக்கொத்தைப் பெற்று, முறைப்பாடுகளை இலகுவாக அறிவிக்கலாம் என்றார்.

இந்த ஆணைக்குழுவின் செயலகம், பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் செயற்படுகிறது. ம-சி

### பொலிஸ்

(1ம் பககத் தொடர்சசி)

பெற்ற முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளும் மாற்றம் செய்யப்பட இருப்பதாகவும் தெரிய வருகிறது.

இந்தப் படை அதிகாரிகள் ஐக்கிய தேசியக் கட்சியின் சொற்படியே தற்போதும் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களைத் தொடர்ந்தே மேற்கண்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இதேவேளை ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்புப் பிரிவு மற்றும் முக்கிய நபர்களது பாதுகாப்புப் பிரிவும் மறுசீரமைக்கப்படவுள்ளன.

இவர்களுக்குப் புதிய முறையில் பாதுகாப்பை வழங்குவதற்கு விசேட பயிற்சி பெற்ற படைப் பிரிவு ஒன்றும் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளது.

அலரி மாளிகையில் வெடிமருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதன் பின்னரே பாதுகாப்புத்துறையில் இவ்வாறான மாற்றங்கள் செய்யப்பட உள்ளன. ரி-சி

### புலிகளின் கோரிக்கைகளை

(1-ம் பக்கத் தொடர்சசி)

களின் கோரிக்கைக்கு இணங்க கடற்படைத் தலைமைப்பீடமும் மறுத்துவிட்டது. மேலும் ஜனாதிபதி சந்திரிகா இது குறித்து விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் மோகான் சமரசேகரவுக்கு அவசர பணிப்பை விடுத்துள்ளார்.

மேலும் கிழக்கில் புலிகளின் நடமாட்டத்தை படையினர் கட்டுப்படுத்தி வருவது தொடர்பாக புலிகள் தெரிவித்த கருத்துக்கும் சாதகமான பதிலை அரசு வழங்காதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### அரசுக்கு எதிராக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும் தாங்கள் விமர்சனங்கள் தெரிவிக்கத் தொடங்கியிருப்பதாக எதிர்க்கடசி தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

இதேவேளை திரு. ரணில் விககிரமசிங்காவிற்கு அளிக்கப்பட்ட திருமண வரவேற்பு வைபவத்தில் கலந்து கொண்ட அமைச்சர் மங்கள சமரவீரவிடம் முன்னாள் அமைச்சர் திரு. அதிகாரி, நாங்கள் செய்ய நினைக்காதவற்றைக் கூட நீங்கள் செய்கிறீர்கள் எனக் கூறினாராம்.

அங்கு நின்ற மக்கள் முன்னணித் தலைவர் திரு. தினேஷ் குணவர்த்தன, பொ. ச. மு. அரசு ஐ. தே. க.வின் கொள்கைகளை ஏற்றுவிட்டதா எனவும் அமைச்சர் சமரவீரவிடம் கேட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது, -சி

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Pos Office SriLanka under Licence Number B/16336/B-